மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல்அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர் : திரு. கா.சின்னச்சாமிபாண்டியன் பி.ஏ.,

105

ந.க.எண்.41/2021

நாள்.01.06.2021

பொருள்: மனைப்பிரிவு–மதுரை மாவட்டம் – அலங்காநல்லூர் பேரூராட்சி – வார்டு எண்.8 சர்வே எண்.63/1எ, 63/2எப் மற்றும் 63/2ஜி யில் 1.78 ஏக்கர் (7235 ச.மீ.)பரப்பளவு இடத்திற்கு மனை எண்.1 முதல் 45 முடிய மனைகளை நகர் ஊரமைப்பு துறையின் மூலம் தொழில்நுட்ப அனுமதி வழங்கி இறுதி ஒப்புதல் வழங்குவது – தொடர்பாக.

பார்வை:

1) மனுதாரர்கள் திரு.G.அரவிந்தன் அவர்களது இணையதள விண்ணப்பம் எண்.202000701013452. நாள்.07.02.2020.

2) மனுதாரர்கள் திரு.G.அரவிந்தன் அவர்களது கடிதம் மற்றும் இணைப்புகள் பெறப்பட்ட நாள். 12.08.2020, 11.09.2020, 18.09.2020, 25.02.2021 மற்றும் 12.04.2021.

3) இணை இயக்குநர், வேளாண்மைத் துறை, மதுரை அவர்களின்கடிதம் எண்– தி4/6581/2020. நாள்.30.06.2020.

4) அரசாணை எண்–18. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி–(1)துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்–16. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி–(1)துறை. நாள்.31.01.2020.

5)நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்கள், மதுரை அவர்களின் ந.க.எண். 2044/2020 மமா நாள்.06.10.2020.

6)உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் உள்ளாட்சி பொது உபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானபத்திர ஆவணம் எண். 5461/2020 மற்றும் 5459/2020, நாள்.26.11.2020.

7)மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்களுக்கு TANGEDCO உபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. ஆவண எண்.5460/2020, நாள்.26.11.2020.

8)நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்கள், மதுரை அவர்களின் ந.க.எண். 2044/2020 மமா நாள்.16.03.2021 (நன்னிலை வரி செலுத்த கோரியது)

9) மனுதாரர்கள் திரு.G.அரவிந்தன் கடிதம் நாள்.20.03.2021 (நன்னிலை வரி செலுத்தியது)

10)நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 13686/2017/எல்ஏ1, நாள்.08.09.2017.

11)அரசாணை எண். 79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.04.05.2017.

12)அரசு கடிதம் எண். 19113/நவ4(3)/2017–1 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை, நாள்.30.08.2017.

13)நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12201/2017/சிபி, நாள்.28.09.2017.

14)நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2017/பிஏ–2, நாள்.06.11.2019.

15)நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.19799/2020/போ நாள்.18.12.2020 மற்றும் 24.12.2020 மற்றும் 08.02.2021.

16) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண். 7978/2018/எல்ஏ2, நாள்.19..04.2012.

17)செயல் அலுவலர், அலங்காநல்லூர் பேரூராட்சி அவர்களது கடிதம் ந.க.எண். 41/2020 நாள்.13.02.2020.

18)TANGEDCO. Technical branch, Chennai letter, No:CE/Comml/SE/Comml/EE3/AEE3/F, Layout/D,63/2019, நாள்.18.05.2019.

19) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்–4367/2019–பிஏ2. நாள்.05.02.2020.

20) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்கள், மதுரை அவர்களின் ந.க.எண். 2044/2020 மமா நாள்.29.04.2021.

21)அலங்காநல்லூர் பேரூராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள்.25.05.2021.

22)இளநிலை பொறியாளர், அலங்காநல்லூர் பேரூராட்சி (பரவை தொகுப்பு) அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடுகள்.
23)இவ்வலுவலக கடித ந.க.எண்41/2020 நாள்.28.05.2021.
24)மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்.

------

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுஎண் 8 சர்வே எண் 63/1A, 63/2F மற்றும் 63/2G யில் 1.78 ஏக்கர் (7235 ச.மீ) பரப்பளவு இடத்திற்கு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு பார்வை 20ன் படி மதுரை மாவட்ட நகர் ஊரமைப்புத் துறையின் மூலம் தொழில்நுட்ப அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி இடம் மற்றும் ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டதில், மொத்த இடத்தில் 1756.62 ச.மீ அளவிற்கு பாதைக்கான அலங்காநல்லூர் சார்பதிவகத்தில் 5461/2020 இன்படி பேரூராட்சிக்கு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தானமாக பத்திரபதிவு செய்யப்பட்டும், மின்வாரிய உபயோகத்திற்காக 39.52 ச.மீ அளவிற்கு மின்வாரியத்திற்கு தானமாகவும், பேரூராட்சி பொது உபயோகத்திற்கு 39.21 ச.மீ அளவிற்கு பேரூராட்சிக்கு தானமாகவும் 26.11.2020 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 4367/2019/பிஏ2 நாள் 5.2.20202ன்படி மொத்த இடம் 10000 சதுர மீட்டருக்கு உள் அமைந்துள்ளதால், பொதுஉபயோகத்திற்கு விடப்பட வேண்டிய 10% இடமான 547.83 ச.மீ அளவு இடத்திற்கு மாற்றாக இடத்தின் வழிகாட்டு மதிப்பீட்டு தொகையானது மனுதாரரால் 12.4.2021ல் அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி இடத்தில் தார்ச்சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி மட்டும் மனுதாரரால் அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, குடிநீர்வசதி, தெருவிளக்கு மற்றும் மழைநீர் வடிகாலில் உறிஞ்சுகுழி அமைக்க உத்தேச மதிப்பீடு இளநிலை பொறியாளரால் தயாரிக்கப்பட்டு அதன் மதிப்பீட்டு தொகை வசூல் செய்து சர்வே எண் 63/1A, 63/2F, 63/2G இல் அமையும் மனை எண் 1 முதல் 45 முடிய உள்ள மனைகளுக்கு நகர் ஊரமைப்பு துறையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு இறுதி அங்கீகாரம் வழங்க மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பார்வை 21இல் காணும் கூட்டப்பொருளின் படி அனுமதி பெறப்பட்டதன் அடிப்படையில் பார்வை 22இல் காணும் இளநிலை பொறியாளரால் கீழ்க்கண்ட பணிகளுக்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. அதனடிப்படையில் கீழ்க்கண்ட கட்டணம் செலுத்திட பார்வை 23இல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் மூலம் மனுதாரர்க்கு தெரிவிக்கப்பட்டது.

| வ.எ | மனையின் பெயர் / முகவரி | சர்வே எண் | மொத்தப் பரப்பளவு | மொத்த பிளாட் எண்ணிக்கை /பரப்பளவு | கூர்தாய்வு கட்டணம் | குடிநீர் வசதிக்கான மதிப்பீட்டுத் தொகை | தெருவிளக்கு வசதிக்கான மதிப்பீட்டுத் தொகை | மழைநீர் உறிஞ்சு குழு அமைக்க மதிப்பீட்டுத் தொகை | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8வது வார்டு, அலங்காநல்லூர் | 63/1எ, 63/2எப் மற்றும் 63/2ஜி | 7235 ச.மீ (1.78 ஏக்கர்) | 1முதல் 45 முடிய (5478.38 ச.மீ) | 45000/- | 265000/- | 225000/- | 110000/- | 645000/- |

மேற்படி தொகை ரூ645000/–க்கான அலங்காநல்லூர் பேரூராட்சியின் கனராவங்கி கணக்கு எண்.1288101083044 நாள்.01.06.2021 ன்படி செலுத்தியுள்ளார். மேலும் மனுதாரர் 3 சதவீத நிலப்பயன் மாற்றக்கட்டத்தொகையினை செலுத்தி அதன்நகல் சமர்ப்பித்துள்ளார்.

எனவே மேற்படி மனைப்பிரிவுக்கு மதுரை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2044/2020/ம.மா. நாள்.29.04.2021ம் தேதியில் குறிப்பிடப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் அடிப்படையில் அலங்காநல்லூர் பேரூராட்சி மனைப்பிரிவு அனுமதி எண்.1/2021–2022 என எண்ணிடப்பட்டு அலங்காநல்லூர் பேரூராட்சிக்குட்ட வார்டு எண். 8 சர்வே எண்.63/1எ, 63/2எப் மற்றும் 63/2ஜி யில் 1.78 ஏக்கர் (7235 ச.மீ.)பரப்பளவு இடத்திற்கு மனை எண்.1 முதல் 45 முடிய மனைகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது.

இணைப்பு. மதுரை நகர் ஊரமைப்பு இயக்குநர்
அவர்களின் கடிதம் ந.க.எண்.2044/2020/ம.மா.
நாள்.29.04.2021ம் தேதிய அனுமதிக்கப்பட்ட வரைபட நகல்

செயல் அலுவலர்,
அலங்காநல்லூர் பேரூராட்சி
, மதுரை மாவட்டம்

பெறுநர்:திரு.G.அரவிந்தன்
13, பஜனை மடத்தெரு,
வேம்பார்பட்டி,
திண்டுக்கல் கிழக்கு வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.

நகல். 1)நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்மதுரை . அவர்களுக்கு தகவலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2)சார்பதிவாளர், பதித்துறை, அலங்காநல்லூர்.
3)உதவி இயக்குநர், நிலஅளவை மற்றும் ஆவணங்கள்துறை. மதுரை.
4)மதுரை மாவட்ட பேரூராட்சிகளின் உதவிஇயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

**அனுப்புநர்**
திரு.அ.விஜயன், பி.இ.,
உதவி இயக்குநர்,
மாட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை மாவட்டம்,
மாநகராட்சி அலுவலகம்,
3-வது தளம், அண்ணா மாளிகை,
மதுரை-625 002.
Website :www.tn.gov.in/dtcp
mail ID : dtcpmadurai@gmail.com

**பெறுநர்**
செயல் அலுவலர்,
அலங்காநல்லூர் பேரூராட்சி,
மதுரை மாவட்டம்.

ந.க.எண்:- 2044/2020 ம.மா நாள்.29.04.2021.

ஐயா,

பொருள் : மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் -மதுரை மாவட்டம் - வாடிப்பட்டி வட்டம் - அலங்காநல்லூர் பேரூராட்சி/ கிராமம் - சர்வே எண்கள்.63/1A, 63/2F மற்றும் 63/2G-யில் 1.78 ஏக்கர் (7235.00ச.மீ) பரப்பளவு இடத்திற்கு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை:
1. மனுதாரர்கள் திரு. G.அரவிந்தன் அவர்களது இணையதள விண்ணப்பம் எண்.202000701013452.நாள்.07.02.2020
2. மனுதாரர்கள் திரு. G.அரவிந்தன் அவர்களது கடிதம் மற்றும் இணைப்புகள் பெறப்பட்ட நாள். 12.08.2020, 11.09.2020, 18.09.2020 ,25.02.2021 மற்றும் 12.04.2021.
3. இணை இயக்குநர், வேளாண்மைத் துறை, மதுரை அவர்களின் கடிதம் எண்-தி4/6581/2020, நாள்-30.06.2020.
4. அரசாணை எண்-18. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-04.02.2019 மற்றும் அரசாணை எண்-16. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை. நாள்-31.01.2020
5. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் உள்ளாட்சி பொது உபயோகம் ஒப்படைப்பு செய்யபட்டமைக்கான தானபத்திர ஆவணம் எண். 5461/2020 மற்றும் 5459/2020, நாள்.26.11.2020.
6. மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்களுக்கு TANGEDCO உபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. ஆவண எண். 5460/2020, நாள். 26.11.2020.
7. இவ்வலுவலக கடிதம் இதே எண்,நாள்.16.03.2021 (நன்னிலை வரி செலுத்த கோரியது).
8. மனுதாரர்கள் திரு. G.அரவிந்தன் கடிதம் நாள்.20.03.2021 (நன்னிலை வரி செலுத்தியது)

9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 13686/2017/எல்ஏ1, நாள். 08.09.2017.
10. அரசாணை எண். 79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 04.05.2017.
11. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை, நாள் 30.08.2017
12. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12201/2017/சிபி, நாள்.28.09.2017.
13. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2017/பிஏ-2, நாள்.06.11.2019.
14, நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-19799/2020/போ நாள்-18.12.2020 மற்றும் 24.12.2020 மற்றும் 08.02.2021.

**<u>உத்தரவு</u>**

*****

மதுரை மாவட்டம் - வாடிப்பட்டி வட்டம் - அலங்காநல்லூர் பேரூராட்சி/கிராமம் - சர்வே எண்கள்.63/1A, 63/2F மற்றும் 63/2G-யில் 1.78 ஏக்கர் (7235.00ச.மீ) பரப்பளவு கொண்ட இடத்தில் மனைப்பிரிவு அனுமதி கோரி பார்வை (1) மற்றும் (2)-ல் சுட்டிய கடிதங்கள் மூலம் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு உத்திரவு வழங்கப்படுகிறது.

ஒப்புதல் வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/மா.ந.ஊ.அ.(மதுரை மாவட்டம்) எண்.09/2021** என எண்ணிடப்பட்டு கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் இத்துடன் இணைக்கப்பட்டு மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

**<u>சிறப்பு நிபந்தனைகள்</u>**

1) பார்வை 9 மற்றும் 11-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்குமாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.

2) மனைப்பிரிவில் உள்ளாட்சி உபயோகம் மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழக உபயோக (TANGEDCO) இடம் பார்வை (7 & 8) -ல் சுட்டிய தானப்பத்திரங்களின் மூலம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. பார்வை (12)-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடத்தினை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனை 17(இ) மற்றும் 17(உ) குறித்து உறுதி செய்து இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.

3) நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள

வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

4) பார்வை (13) -ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate project or part of it only after registering the Real Estate project with the Real Estate Authority" -ன் படி நடவடிக்கை தொடருமாறு கேட்டுக்கொள்ள வேண்டும்.

5) பார்வை (12)-ல் சுட்டிய அரசாணையின்படி நகர் ஊரமைப்பு துறையின் முன்அனுமதி பெறப்படும் மேம்பாடுகளுக்கு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு, திட்டமில்லாத பகுதிக்கான நில உபயோக மாற்ற விதிகள் 2017, விதி(3) -ன்படி உள்ளாட்சிக்கான கூராய்வு கட்டணமாக ரூ.1000/-(ரூபாய் ஆயிரம் மட்டும்) மற்றும் விதி(9)-ன்படி நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47-ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்து, அதனை வசூலித்து கீழ்கண்ட அரசு கணக்கு தலைப்பின் கீழ் வரவு வைக்கப்பட்ட பின்னரே மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**கணக்கு தலைப்பு**

**0217-Urban Development**

**60 - other urban Development Schemes**

**80 - other ReceiptsAS -Receipts under Land use Conversion charges**

**27 Non Taxation fees - 09 collections (DPC-0217-60-800-AS-2790).**

பார்வை (9) ல் கண்ட கடிதம் மூலம் மனுதாரரிடமிருந்து அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி கட்டணம் மற்றும் கூராய்வு கட்டணம் முழுமையாக பெறப்பட்டுள்ளது.இத்துறையால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.17(ஈ)ன்படி அக்கடித நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலத்திற்கு, தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு செயல் அலுவலர்,அலங்காநல்லூர் பேரூராட்சி அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், மனுதாரர் மேற்கொண்டு உத்தரவு பெற செயல் அலுவலர்,அலங்காநல்லூர் பேரூராட்சி, மதுரை மாவட்டம் அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை மாவட்டம்.
29/4/24

<u>இணைப்பு</u>

1. வரைபடம் மற்றும் நிபந்தனைகள் - 2 நகல்கள்.